**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**<u>தேதி: 23.06.2026</u>**

**<u>STC.No. 209 /2026</u>**

**<u>பெயர் – அருண்குமார் த/பெ. பாலசுப்பிரமணியன்</u>**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் குற்றமுறையீட்டாளர் எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

வாதி நிறுவனத்தின் பொது அதிகார முகவர் என்ற வகையில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன்.

**இவ்வழக்கில் புகார்தாரரான தனலெட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ் கம்பெனி அத்தாட்சி நிறுவன பதிவு சான்று நகல் வா.சா.ஆ. 1**

**நிறுவனம் மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் நகல் வா.சா.ஆ. 2.**

**இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக பெரம்பலூர் துணை சீட்டு பதிவாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எண். 50/2019ல் ஏற்பட்ட தீர்ப்பின் ஒளிப்பட நகல் வா.சா.ஆ. 3.**

**வழக்கு எதிரி அவரது கடனை தீர்ப்பதற்காக எங்கள் நிறுவனத்திற்கு வழங்கிய State Bank of India, Puducherry கிளைக்கான 337711 எண் உள்ள 05.06.2023 தேதியிட்ட ரூ. 8,83,188/-க்கான காசோலை அசல் வா.சா.ஆ.4.**

**மேற்படி காசோலை வங்கியில் தாக்கல் செய்ததில் எதிரியின் வங்கி கணக்கில் Exceeds Arrangements என்று திருப்பப்பட்டதற்கான 08.06.2023 செக் ரிட்டன் மெமோ வா.சா.ஆ. 5.**

மேற்படி காசோலைக்கான பணத்தை கேட்டு எங்கள் வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட 05.07.2023 தேதியிட்ட அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ. 6.

மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 7.

வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டு எதிரி பொய்யான சங்கதிகளை கொண்டு அனுப்பிய 19.07.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.06.23 19:07:43 +0530

Judicial Magistrate No.I
Perambalur.